தெளிவாக பதில் சொல்கிறேன். இந்த மார்ச்சுவரி வேனைப் பொறுத்த வரையில் ,இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக இப்படித்தான் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், அங்கே ஒரு ராக்கெட் மாதிரியாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறபடி, சில நேரங்களில் அங்கே வேன் இருந்தாலும்கூட, அங்கு டிரைவருக்கும் டாக்சிகாரர்களுக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிற மாதிரி செய்தி வருகிறது.

பல இடங்களில் நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக எப்படி திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு தொகுதியில் வேலை செய்து கொண்டிருக்கிறார்களோ அதைப்போல நானும் ஜெனரல் ஆஸ்பத்திரி தொகுதியில் 10 ஆண்டுக் காலமாக வேலை செய்கிற காரணத்தால் இது போல '' கம்ப்ளெயின்ட் '' வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் என்ன சிக்கல் என்றால், உடனே விவரங்களுடன் கம்ப்ளெயின்ட் யாரும் கொடுப்பதில்லை. இருந்தாலும்கூட, அதற்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்காமல் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையிலே அது இன்னும் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் இருக்கக்கூடியவர்கள் மட்டும் பெரிய ஆஸ்பத்திரிகளில் மருத்துவம் பெற்று இறப்பது இல்லை. கிராமப் பகுதியிலேயிருந்து, 100 மைல்களுக்கு அப்பால் இருந்தெல்லாம் வந்து ட்ரீட்மென்ட் பெறக்கூடியவர்கள் இறந்துவிட்டால் கூட இதுபோன்ற பிரச்னைகள் வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற நகரத்திற்கென்று வண்டி ஏற்படுத்திவிட்டால் பிரச்னை தீரும். அதற்காகத் தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 395—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா துவரங்குரிச்சி நகர பஞ்சாயத்தை மையமாகக் கொண்டு துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்துவிடும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம்; எனில், அப்பேருந்து விடும் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்ட மண்டலப் போக்குவரத்து அலுவலர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துவிடும் திட்டத்தில் அங்கு நிலம் வழங்கப்பட்டதாக கேள்விப்படுகிறோம். எவ்வளவு நிலம் இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பராமரிப்பதற்கான நிலம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை.

ஆந்திராவிலிருந்து வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கான வரிவிலக்கு.

*வினா எண். 396—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கு அரசு வரியை ரத்து செய்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதனால் தமிழக அரசுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பிற மாநிலங்களிலிருந்து மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் உரிமம் பெற்று பிற மாநிலங்களிலிருந்து வரும் பேருந்துகளுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

(ஆ) இதனால் தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் ஆந்திர மாநில போக்குவரத்து அதிகார மன்றங்களால் (Regional Transport Authorities) அனுமதி அளித்து தமிழ